# விரிவுரை மொழி: ஒரு திறந்த உரையாடல்

ஏ.எப்.எம். அஷ்ரஃப்

ஒரு குறிப்பிட்ட விடயம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட தலைப்புத் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்காக (Present) வாய்மொழி (Oral)யாக ஆற்றப்பெறும் விரிவான உரையை விரிவுரை (Lecture) எனலாம். உதாரணமாக பல்கலைக்கழகங்கள், கல்விக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் விரிவுரைகள் ஆற்றப்பெறுகின்றன. பெரும்பாலும் குறிப்பிட்டவொரு விடயம் தொடர்பிலான கோட்பாடுகள், கொள்கைகள், சமன்பாடுகள், வரலாறுகள், விமர்சனரீதியான தகவல்கள் போன்றவற்றை கேட்போருக்குக் கொண்டுசேர்க்கும் (Convey) முயற்சியின் விளைவே விரிவுரை ஆகும். இவ்விரிவுரையை ஆற்றுவோர் இலங்கை போன்ற நாடுகளில் விரிவுரையாளர்கள் (Lecturers) என அழைக்கப்பெறுகின்றனர். இந்தியா போன்ற நாடுகளில் பேராசிரியர்கள் (Professors) என அழைக்கப்பெறுகின்றனர். விரிவுரையாற்றுபவர், உரைநிகழ்த்தும் அரங்கினுள் கேட்போருக்கு (Audience) முன்னால் நின்று உள்ளடக்கத்துக்கு (Content) ஏற்றவாறாக தனது விரிவுரையை ஆற்றுவார்.

இவ்வாறான விரிவுரைகளை ஆற்றுவதில் மொழிப்பிரயோகம் முக்கிய பங்காற்றுகிறது. மொழி ஒரு தொடர்பாடற் கருவி (Communicative Tool). ஒருவரது எண்ணத்தையும் சிந்தனையையும் கருத்தையும் இன்னொருவருக்கு உணர்த்த இம்மொழி மிகச் சிறந்த பரிமாற்ற ஊடகமாகத் தொழிற்படுகிறது. ஆயினும் இம்மொழியை இடமறிந்து காலமறிந்து சரியாகப் பயன்படுத்தவேண்டும். இல்லையெனில் தெரிவிக்க விரும்பும் தகவல்களைச் சரியான இடத்தில் சரியாகக் கொண்டு சேர்க்க முடியாமற் போய்விடும். இது பல்வேறு அசௌகரியங்களையும் தவறான வழிகாட்டலையும் ஏற்படுத்திவிடும். சாதாரணப் பயன்பாட்டில் கிளைமொழிப் பிரயோகம் சிக்கல்களை ஏற்படுத்துவதில்லை. ஆனால் கல்விசார் நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தும் பொதுமொழிப் பிரயோகத்தில் அல்லது தராதரமொழிப் பிரயோகத்தில் பயன்படுத்தப்படும் தவறான மொழிக் கையாளுகை சிக்கல்களை ஏற்படுத்திவிடும்.

இவ்வாறானவொரு சூழலில் சமகாலத் தமிழ்மொழிமூல விரிவுரை மொழிக்கையாளுகை தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவ்விமர்சனம் தொடர்பில் அவதான ஆய்வொன்று நிகழ்த்தப்பட்டது. தரவுகள் அவதானங்கள் மூலமாகவும் வினாக்கொத்துக்கள் மூலமாகவும் பெறப்பட்டன. இலங்கையில் செயற்பட்டுவரும் பழையதும் புதியதுமான நான்கு பல்கலைக்கழகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பல்கலைக்கழகங்களில் மொழியாளுமையை வெளிக்காணக்கூடியதாக இருந்த கலை – கலாசார பீடம், வர்த்தக – முகாமைத்துவ பீடம், தகவல் தொழிநுட்பத்துறை சார்ந்த தமிழ் மொழி மூல விரிவுரைகள் அவதானிக்கப்பட்டன. இங்கு விரிவுரைகளின்போது வழங்கப்பட்ட குறிப்புகளும் பரீட்சை வினாத்தாள்களும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

அவதானங்களின்போது நான்கு பல்கலைக்கழகங்களிலும் 50%ஆன விரிவுரைகளில் மொழிப்பிரயோகம் கவலைக்குரியதாகக் காணப்பட்டது. **அவைகள்** முதலிய பயன்பாடு, எழுவாய் – பயனிலை இயைபின்மை, பொருள் மயக்கம், தேவையில்லாதவிடத்து **ஆகவே**, **எனவே**, **மேலும்**, **அதாவது** முதலான வாக்கிய இணைப்பிடைச்சொற்கள் பயன்பாடு ஆகியன விரிவுரைகளின்போது கவனத்திற்கொள்ளப்படவில்லை.

பிராந்தியப் பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளின்போது 25%ஆன விரிவுரையாளர்கள் பொதுத்தராதரக் கிளை மொழியை (Standard Spoken Dialect)ப் பயன்படுத்தாமல் தாம்சார்ந்த பிரதேச அல்லது சமூகக் கிளைமொழிகளை (Regional Dialect or Social Dialect)க் கொண்ட பேச்சுவழக்கையே பயன்படுத்துகின்றனர். மாணவர் சார்பில் பெறப்பட்ட வினாக்கொத்துக்கள் இதனைப் பெருங்குறையாகக் கருதுகின்றன.

மொழிகள் சார்ந்த துறைகளில் 25%ஆனவர்களும் சமூக விஞ்ஞானங்கள் சார்ந்த துறைகளில் 40% ஆனவர்களும் பண்பாடு, நாகரிகம், கலாசாரம் சார்ந்த துறைகளில் 60%ஆனவர்களும் தமது மொழிப் பிரயோகம் தொடர்பில் அக்கறை செலுத்துவதில்லை.

கலைச்சொல்லாக்கத்திலும் கலைச்சொற் பயன்பாட்டிலும் மொழிகள் சார்ந்த துறையினர், சமூக விஞ்ஞானங்கள் சார்ந்த துறையினர் பண்பாடு, நாகரிகம், கலாசாரம் சார்ந்த துறையினர் என்ற வேறுபாடில்லாமல் 75%ஆன திருப்தி காணப்படுகின்றது.

சமூக விஞ்ஞானங்கள் சார்ந்த துறையினரில் 25%ஆனவர்களும் பண்பாடு, நாகரிகம், கலாசாரம் சார்ந்த துறையினரில் 75%ஆனவர்களும் விரிவுரைக் குறிப்புக்களை வழங்கும்போது மிக நீண்ட வாக்கியங்களைப் பயன்படுத்த முனைவதனால் அவர்கள் கூற விரும்பும் விடயதானங்களை இலகுவில் உணரமுடியாதுள்ளது.

விரிவுரைமொழி எப்படியிருப்பினும் துறைசார்ந்த மாணவர்கள் தாம் கற்கும் விடயப் பரப்பில் 90%ஆனவற்றை உள்வாங்கிக் கொள்ளக்கூடிய நிலை காணப்படுகிறது. இது விரிவுரையாளர்கள் தமது பாடப்பரப்பில் அதிக அக்கறை கொண்டுள்ளதை வெளிக்காட்டுகிறது.

இந்த அடிப்படையில் நின்று விரிவுரையாளர்களை மூன்று தொகுதியினராகக் கணித்து வகைப்படுத்தலாம்:

1. விடய ஆற்றலும் மொழி ஆற்றலும் வாய்த்தோர்
2. விடய ஆற்றல் வாய்த்தோர் ஆனால் மொழி ஆற்றல் வாய்க்காதோர்
3. மொழி ஆற்றல் வாய்த்தோர் ஆனால் விடய ஆற்றல் வாய்க்காதோர்

இவ்வகைப்பாட்டினை வைத்துக் கொண்டு, கற்பித்தற் கலை (The Art of Teaching)யில் சிறந்து நிற்கும் கதாநாயகர்களை எளிதில் இனங்காணலாம். ஏனெனில் சிறந்த கற்பித்தற் கலை வாய்த்தோரை இனங்காட்டுவதில் மொழியாற்றல் முக்கிய பங்காற்றுகிறது. குறிப்பிட்டவொரு விரிவுரையாளர் விடயதானத்தில் எவ்வளவு சிறப்பாற்றலைக் கொண்டிருந்தாலும் அதனைக் கேட்போருக்குத் தெளிவாகவும் துல்லியமாகவும் எத்திவைக்க தகுந்த மொழியாற்றலைக் கொண்டிருக்க வேண்டும். மொழியாற்றலில் குறையிருப்பின் கற்பித்தற் கலை களையிழந்துவிடும்.

இங்கு முதலாம் வகையினராகிய விடய ஆற்றலும் மொழி ஆற்றலும் வாய்த்தோர் கற்பித்தற் கலை சிறந்த கதாநாயகர்களாக விளங்குகின்றனர். இரண்டாம் வகையினராகிய விடய ஆற்றல் வாய்த்தும் மொழியாற்றல் வாய்க்காதோர் விரிவுரையாற்றுவதில் தடுமாற்றமடைகின்றனர். இத்தடுமாற்றம் அவர்களது கற்பித்தற் கலையில் பின்னடைவை ஏற்படுத்துகிறது. மொழியாற்றல் வாய்த்தும் விடயதானத்தில் ஆற்றல் வாய்க்காத மூன்றாம் வகையினர் விரிவுரையை ஓரளவு சமாளிக்கின்றனர். விடயதானத்தில் குறையிருப்பினும் மொழியை இலாவகமாகக் கையாள்வதால் தடுமாற்றமில்லாமல் விரிவுரையை நகர்த்திச் செல்ல அவர்களால் முடிகிறது.

கலை (Arts) சார்ந்த விரிவுரைகளில் மட்டுமல்ல அறிவியல் (Science) சார்ந்த விரிவுரைகளிலும் மொழி முக்கியத்துவம் பெறுகிறது. அதுவும் குறிப்பாக தாய்மொழி முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, விரிவுரையாளர்கள் தமது விரிவுரைகளின்போது மொழியை சிறப்பாகக் கையாள்வதில் மிகுந்த கவனத்தைச் செலுத்தவேண்டும். ஒரு சிறந்த விரிவுரையாளரை மாணவர்களும் சமூகமும் இனங்கண்டு கொள்வது, அவரது மொழியாற்றலிலும் எழுத்தாற்றலிலுமே தங்கியுள்ளது. விடயப் பரப்பில் எவ்வளவு அறிவிருந்தாலும் சிந்தனை, எண்ணம் முதலியன சிறந்திருந்தாலும் சரி அவற்றை வெளிப்படுத்த ஒரு ஊடகம் அல்லது கருவி தேவை. அவ் ஊடகம் அல்லது கருவிதான் மொழி. இம்மொழி பேச்சுமொழி, எழுத்துமொழி என இருவகைப்படுகிறது. ஒரு விரிவுரையில் இவ்விரு வகையுமே முக்கியம் பெறுகின்றன.

**ஆகவே, ஒரு விரிவுரையில் கையாளப்படும் மொழி:**

- தெளிவானதாக இருக்கவேண்டும் (It should be **Clear**)
- துல்லியமானதாக இருக்கவேண்டும் (It should be **Accurate**)
- இயல்பானதாக இருக்க வேண்டும் (It Should be **Natural**)
- தொடர்பாடும் தன்மையுடையதாக இருக்கவேண்டும் (It Should be **Communicative**)

ஒரு விரிவுரையாளர் தமது விரிவுரையின்போது தெரிவிக்கும் கருத்துக்கள் எப்போதுமே தெளிவானதாக இருக்கவேண்டும். அவர் கையாளும் உரை நடையில் கருத்து மயக்கங்கள் இருக்கக் கூடாது. எந்த மொழியைக் கையாள்கிறாரோ அந்த மொழியின் அமைப்பையும் (Structure) பயன்பாட்டையும் (Usage) நன்கறிந்தவராக இருக்கவேண்டும். குறிப்பிட்ட மொழியின் வாக்கிய அமைப்பு (Sentence Structure) நடையியல் (Stylistics) முதலானவற்றில் பரிச்சயமுடையவராக இருக்கவேண்டும். இல்லாவிடின் கூறவரும் விடயம் தெளிவில்லாமலாகி விடும். உதாரணமாக: ஆங்கில மொழி வாக்கியமைப்பை அல்லது சிங்கள மொழி வாக்கியமைப்பைத் தமிழில் கையாள முடியாது. ஏனெனில் இம்மொழிகளிடையே அமைப்பில் வேறுபாடுகளுள்ளன.

> ஆண்டுதோறும் மறைந்த தலைவருக்காக நினைவஞ்சலிக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றது.
>
> பல்கலைக்கழகங்களில் பகடிவதை மிருகத்தனமான தடையை எதிர்கொண்டு உள்ளது.
>
> மாணவர்களுக்காக பல்கலைக்கழக மருத்துவ சேவை தமது சேவையை விஸ்தரித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட வாக்கியங்களைப் புரிந்து கொள்வதில் இடர்பாடுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தெளிவற்ற வாக்கியங்களைப் பிரயோகிப்பதிலிருந்தும் விரிவுரையாளர்கள் விலகிக் கொள்ள வேண்டும்.

ஒரு விரிவுரையாளர் தாம் தெரிவிக்க விரும்பும் கருத்தை மிகத் துல்லியமாகத் தெரிவிக்க வேண்டும். அதில் மாறுபாடு இருக்கக் கூடாது. விடயப்பரப்பில் அதி உச்ச ஈடுபாடு கொண்டு, பரந்த வாசிப்பினை மேற்கொண்டு, தகவல்களை நுண்ணாய்வு செய்து விரிவுரையில் வழங்க முன்வர வேண்டும். அதுவே ஒரு விரிவுரையின் துல்லியத்தை உறுதிசெய்யும். கூறவரும் விடயத்தின் நம்பகத் தன்மையையும் இவ்விடத்தில் உறுதி செய்துகொள்ள வேண்டும். பொருத்தமற்ற விடயங்களை தவறான மொழிப் பிரயோகத்தினூடாக வழங்கி கேட்போரை குழப்பத்தில் ஆழ்த்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். மிகச் சரியானதை தெளிவாகச் சொல்லும்போது துல்லியம் வாய்த்துவிடும்.

> மத்திய மாகாணத்தில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை.
> நாட்டில் மோசமான உணவுத் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஆசிரியரின் அறிவுரையைக் கேட்டு மனந்தளர்ந்திருந்த பெற்றோர் உற்சாகமடைந்தனர்.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு கருத்து மயக்கத்தைத் தருகின்ற வாக்கியங்களைக் கையாளுவதிலிருந்தும் விரிவுரையாளர்கள் தவிர்ந்து கொள்ளவேண்டும். பிரயோகிக்கும் மொழியில் துல்லியமின்மையே இக்கருத்து மயக்கங்களுக்குக் காரணமாகும்.

முன்னர் குறிப்பிட்டதைப் போன்று மொழி பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என இருநிலைப்பட்டது. பேச்சுவழக்கில் கிளைமொழிகளின் செல்வாக்கு முதன்மையானது. கிளைமொழிகளை பிரதானமாக பிரதேசக் கிளைமொழி, சமூகக் கிளைமொழி, பொதுவழக்கு அல்லது தராதரமொழி என வகுத்து நோக்குவர் மொழியியலாளர். ஒரு விரிவுரையில் குறிப்பிட்ட பிரதேசக் கிளைமொழியை அல்லது குறிப்பிட்ட சமூகக் கிளைமொழியைப் பயன்படுத்துவது சிக்கல்களை தோற்றுவித்துவிடும். ஏனெனில் கேட்போர் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவோ வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களாவோ இருக்க முடியும். ஆகையால் பிரதேசக் கிளைமொழிப் பயன்பாடு விரிவுரை மண்டபத்தின் இயல்பு நிலையைப் பாதிக்கலாம். ஏனெனில், சில பிரதேசக் கிளைமொழிகளின் அல்லது சமூகக் கிளைமொழிகளின் தனித்துவமான சொற்களுக்கு ஏனையவர்களால் எளிதில் பொருளறிந்து கொள்ள முடியாது. உதாரணமாக: ஒண்ணா, பசுந்து, கொப்பா, கொம்மா, அலிய, மறா, பேந்து முதலான ஏராளமான சொற்கள் சில கிளைமொழிகளில் தனித்துவமானவையாகப் பயன்படுகின்றன.

எனவே, சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு பொதுப்பேச்சு வழக்கு அல்லது தராதரமொழியை விரிவுரைகளில் பயன்படுத்தலாம். அப்போதுதான் ஒரு விரிவுரை இயல்பானதாக இருக்கும். வலிந்து செந்தமிழில் பேசமுனைவதைப் போன்ற செயல்கள் மொழிப்பாவனையில் ஒரு செயற்கைத் தன்மையை உருவாக்கிவிடும்.

மொழி ஒரு தொடர்பாடல் ஊடகம். மொழியின் அடிப்படைத் தொழிலே தொடர்பாடுவதுதான். ஆகவே, விரிவுரையொன்றில் கையாளப்படும் மொழியும் தொடர்பாடும் தன்மையுடையதாக இருக்க வேண்டும். முற்குறிப்பிட்ட மூன்று விடயங்களையும் கவனத்திற் கொள்ளும்போது இவ்வம்சம் தானாகவே அமைந்துவிடும். ஒரு மொழிப்பயன்பாடு தெளிவானதாகவும் துல்லியமானதாகவும் இயல்பானதாகவும் அமையும்போது தொடர்பாடும் தன்மையும் கூடவே பிறந்துவிடும்.

மொழியை தொடர்பாடும் தன்மையுடையதாக்குவதும் ஒரு கலைதான். வெறும் வார்த்தைகளைத் தொடுப்பதன் மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்ய முனையக் கூடாது. கேட்போரைக் கவரக்கூடியவாறு ஆற்றல்மிகு (Dynamic) சொற்களைப் பிரயோகிக்க வேண்டும். விளக்கங்களை எத்திவைப்பது என்பது தொடர்பாடும் தன்மையுள்ள மொழிப் பிரயோகத்தால் மட்டுமே முடியும். இருவர் தொடர்பாடுவதன் ஊடாக ஏற்படும் அனைத்துச் சிக்கல்களுக்கும் காரணமாய் அமைவதும் மொழிப் பிரயோகம்தான். எனவே, தொடர்பாடல் ஓர் அமைதியான சூழலைத் தரவேண்டும். கேட்போரைத் தரக்குறைவாக விளிப்பது, தனிப்பட்ட ஒரு நிறுவனத்தை அல்லது ஒரு தனிநபரை குறைகூறுவது, சாதி, சமய, இன காழ்ப்புணர்வினை வெளிப்படுத்துவது முதலான அம்சங்களைக் கொண்ட தொடர்பாடல் முறைமை விரிவுரையின்போது தவிர்க்கப்படல் வேண்டும். விரிவுரைகளில் இவ்வம்சங்கள் இடம்பிடிக்கும்போது கேட்போரின் அவதானம் திசைதிரும்ப வாய்ப்புண்டு.

மேற்குறிப்பிட்ட மிக முக்கியமான நான்கு அம்சங்களுக்கும் மேலதிகமாக கவனத்திற் கொள்ளவேண்டிய சில விடயங்களும் உள்ளன. ஒரு விரிவுரையிற் கையாளப்படும் மொழியின் தொனி விடயப் பரப்புக்கும் கேட்போரின் தரத்திற்கும் ஏற்றவாறு இருத்தல் வேண்டும். மிக அமைதியாகச் சொல்ல வேண்டிய விடயத்தை ஆக்ரோசத்தோடும் உரத்துச் சொல்ல வேண்டியவற்றை மிக அமைதியாகவும் சொல்வது தவிர்க்கப்படல் வேண்டும். அறிஞர்கள் மத்தியில் பேசுகிறோமா? ஆய்வு மாணவர்களிடம் பேசுகிறோமா? பட்டதாரி மாணவர்களிடம் பேசுகிறோமா? அல்லது யாரிடம் பேசுகிறோம் என்பதைப் பொருத்து விரிவுரையின் தொனியையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.

அதேபோன்று மொழியைப் பயன்படுத்தும் வேகமும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். விரிவுரை என்பது தெளிவுபடுத்தலை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, கிரகித்தல் என்பதும் இங்கு முக்கியம் பெறுகிறது. விரிவுரையைக் கேட்போர் அதனைக் கிரகித்து உள்வாங்கிக்கொள்ள அவகாசம் அளிக்கப்படல் வேண்டும். ஆகவே, விரிவுரைகளில் கையாளும் மொழியின் வேகமும் மிதமானதாக இருக்கவேண்டும். அப்போதுதான் ஒரு விரிவுரை வினைத்திறன் மிக்கதாக அமைய வாய்ப்புண்டு.

ஆக, ஒரு விரிவுரையின் வெற்றி – தோல்வி, அவ்விரிவுரையிற் கையாளப்படும் மொழியிலேயே தங்கியுள்ளது. ஒரு விரிவுரையில் விடயப் பரப்பிற்கு (Subject) எவ்வளவு முக்கியமளிக்கிறோமோ அந்தளவுக்கு பயன்படுத்தும் மொழிக்கும் (Language) முக்கியமளிக்கப்பட வேண்டும்.

விரிவுரையாளர்கள் தமது மொழியாற்றலைச் செழுமைப்படுத்துவதற்கு தொடர்ச்சியாக வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்க வேண்டும். அதன்பொருள் விரிவுரையாளர்கள் அதிகமாக வாசிப்பதில்லை என்பதல்ல. அநேகமான விரிவுரையாளர்கள் தமது விடயப்பரப்புத் தொடர்பான நூற்களையே அதிகம் வாசிக்கின்றனர். தமது மொழியாற்றலை மேம்படுத்தும் நோக்கில் யாரும் தமது வாசிப்புப் பழக்கத்தை மெருகூட்டுவதில்லை. மொழியாற்றலை மேம்படுத்த இலக்கண நூல்களை மட்டும் தேடிக் கற்க வேண்டியதில்லை. நல்ல எழுத்தாற்றல் வாய்ந்த எழுத்தாளர்கள் மிகச் சிறந்த படைப்புகளை எளிய மொழிநடையில் தந்திருக்கிறார்கள். நல்ல மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் தேர்ந்த மொழிநடையில் வெளிவந்திருக்கின்றன. மொழியை மேம்படுத்தும் நோக்கிலும் புற அறிவைப் பெருக்கும் நோக்கிலும் முற்குறிப்பிட்டவாறான நூல்களைத் தேர்ந்து வாசிக்கலாம். வாசிப்பினை மேற்கொள்ளும்போது குறிப்பிட்ட உரையில் பயன்படுத்தப்பட்டிருக்கும் மொழி தொடர்பிலான அவதானம் மிக அவசியமாகும். தமது நிறுவனஞ்சார் மொழியியலாளர்களை அல்லது மொழிவல்லுநர்களை நட்புடன் அணுகி, மொழியாற்றலை ஊக்கப்படுத்தும் நூற்களை தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறந்தது. எளிய நடையில், குறைவான சொற்களைப் பயன்படுத்தி, சிறிய வசனங்களால், பெரும் பொருள் தரும் நூல்கள் ஏராளமாக வெளிவந்திருக்கின்றன. அவற்றை துறைசார் வல்லுநர்களின் துணையோடு தேடிப்பெற்று, தமத மொழியாற்றலை மேம்படுத்தி, கற்பித்தற் கலையில் கதாநாயகர்களாக இருக்கவேண்டியது ஒவ்வொரு விரிவுரையாளரதும் பொறுப்பாகும்.

# மலையகக் கவிதைகள் சித்திரிக்கும் மலையகச் சிறுவர்கள்

திருமதி. எம்.ஏ.எஸ்.எப். ஸாதியா

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள், சிறுவர்கள் சரியான முறையில் பாதுகாக்கப்பட்டு, வழிகாட்டப்பட வேண்டியவர்கள், சிறுவர்கள் தாம் எவ்வாறான அனுபவங்களைத் தம் குடும்பம், சூழல் ஆகியவற்றில் இருந்து பெறுகின்றார்களோ அதற்கேற்பவே அவர்களது செயற்பாடுகளும் அமையும். சிறுவர் தொடர்பான விடயங்களில் சிறுவர் நலம் பேணல், சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் என்பன மிகவும் இன்றியமையாத விடயங்களாகும். சிறுவர்களது பிரச்சினைகள் அடையாளங் காணப்பட்டு தீர்க்கப்படாதவிடத்து, சமூகம் எதிர்பார்க்கும் நற்பிரஜைகளைச் சமூகத்திற்கு வழங்க முடியாது போய் விடுகின்றது. அந்தவகையில் மலையகச் சிறுவர்களின் பிரச்சினைகளும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொரு விடயமாகும்.

## 1.1 மலையகச் சிறுவர்களும் வறுமை நிலையும்:

பொதுவாக நோக்கும் போது, ஏனைய பிரதேச சிறுவர்களை விடவும் மலையகச் சிறுவர்கள் மிகவும் பரிதாபத்திற்கு உரிய நிலையிலேயே காணப்படுகின்றனர். உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், தம் ஆசைகளை நிறைவு செய்து கொள்ள முடியாதவர்களாகவும் காணப்படுகின்றனர். ஏனைய சிறுவர்களுக்கு இருப்பது போன்ற வசதிகள் அற்றவர்களாக, பெரும் ஏக்கங்களோடு வாழ்ந்து வருபவர்களே இவர்கள். இதற்கு அடிப்படைக் காரணம் வறுமையாகும். இச்சிறுவர்களின் நிலை பற்றி சி.வி. வேலுப்பிள்ளை தமது 'தேயிலைத் தோட்டத்திலே' எனும் கவிதையில் பின்வருமாறு கூறியுள்ளார்;

"………. இவர்களும்
எண்ணெய் காணா
தலைமயிர்ச் சடையுடன்
என்றோ குளித்த
அழுக்கு உடம்புடன்
கண்ணிலே காணும்
சேற்றில் புரளுவர்
காட்டெலி, கோழிகள்
வேற்றுமை யறிந்திலர்
கூரிய சூரியக்
கதிரொளி அவருடல்
குடைந்து சதையையும்
எரிப்பதைக் கண்டவர்
யாரே! இவர் சுகம்
நண்ணியதுண்டு?
யாதிவர் வளர்ப்பென
எண்ணியதுண்டு…….?"

(வேலுப்பிள்ளை, சி.வி., (1969), தேயிலைத் தோட்டத்திலே, ப.46)

இம்மலையகச் சிறுவர்களுக்குப் போதியளவு உணவோ, போஷணை உள்ள உணவுகளோ கிடைப்பது மிகவும் குறைவு. பெரும்பாலும் அவர்களுக்கு ஒவ்வொரு பருவ வளர்ச்சிக்கான போஷாக்கு உணவுகளைப் பெற்றுக் கொடுக்கும் நிலையில் பெற்றோரும் இல்லை. விதவிதமான உணவுகளைச் சுவைப்பதற்குரிய வாய்ப்பு, இச்சிறுவர்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. எத்தனையோ பொழுதுகள் பட்டினி கிடக்கும் இச்சிறுவர்களின் அவல நிலை, பல கவிதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. அல் அஸூமத்தின் 'அந்தப் பழைமை!', பெனியின் 'காட்சி மாற்றம்', தமிழோவியனின் 'பழிசூழ் உலகு', றசீனா புகாரின் 'மலையகத்து சுப்பன்', சந்தனம் சத்தியநாதனின் 'கிளை தவறிய இலைகள்', இராகலைப் பன்னீரின் 'இன்று எம்மவர்' முதலிய கவிதைகளில் மலையகச் சிறுவர்களின் உணவு, உணவுக்காகப் படும் கஷ்டங்கள் அனைத்தும் விளக்கப்பட்டுள்ளன.

இராகலைப் பன்னீரின் 'இன்று எம்மவர்' எனும் கவிதையில் இச்சிறுவர்களின் அவலம் மனதை உருக்கும் வகையில் கூறப்பட்டுள்ளது. பலர் நாளைக்கு என்று சேர்த்து வைக்கும்போது, இவர்கள் இன்றைக்குக் கூட, உணவின்றி இருக்கின்றனர். இச்சிறுவர்கள் இரவு உணவு கூட, இன்றித் துயின்று எழுந்து வெறும் வயிற்றோடு பாடசாலைக்குச் செல்கின்றனர். பாடசாலை சென்று கொஞ்சம் நேரமாகும் போதே கண்கள் தடுமாறும், தலை சுற்றும். இந்நிலையில் மற்றவர் உணவைக் கூடப், பறித்துச் சாப்பிடத் தோன்றும் என வேதனையோடு கூறியுள்ளார் கவிஞர். அவ்வகையில்;

"இரவுப் பசி
இருக்கவே
காலைப் பசியையும்
காவிக் கொண்டு
பள்ளிக்குப் போவோம்!
தலையும் கண்ணும்
தடுமாறித்
தடுமாறியே சுற்றும்!
இன்னொருத்தன்
ரொட்டியைக் கூட
பறிக்க மனம் வரும்!……"

(இராகலை பன்னீர், (1999), புதிய தலைமுறை, ப. 16)

என வரும் கவிதைப் பகுதி நோக்கத்தக்கது. இவர்களுக்குப் பாலோ, பாற்பொருட்களோ உணவாகக் கிடைப்பது மிக அரிது. தேநீரும் பாலில்லாமல்தான் இவர்களுக்குக் கிடைக்கின்றது. இவர்களது பொதுவான உணவுகளாக ரொட்டியும் தேநீரும், மற்றும் மரவள்ளிக் கிழங்கு, சேம்பிலைக் கிழங்கு முதலியனவே அமைகின்றன. ரொட்டியும் தேங்காய் காணாத வெறும் மாவால் செய்யப்பட்ட ரொட்டியாகவே இருக்கின்றது. இந்நிலைமை றசீனாவின் 'மலையகத்து சுப்பன்' எனும் கவிதையில் பின்வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளது;

"........ ரொட்டி சுட்டு சாயத்தோடு
தொட்டு நாங்கள் தின்றுவிட்டு
கட்டிலின்றி (ஈரத்) தரையினிலே
கண்ணயர்வோம் கோணி போர்த்து ......."

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 14)

ஆசைப்படும் உணவுகளை உண்ண முடியாதிருப்பது போலவே, தாம் விரும்பும் உடைகளை அணியவும் வாய்ப்பற்றவர்களாக இச்சிறுவர்கள் விளங்குகின்றனர். அதிகமான சிறுவர்கள் மேலாடை இன்றியும் வயதில் சிறிய சிறுவர்கள் பிறந்த மேனியுடனும் அங்குமிங்கும் அலைந்து திரிவர். அதிகமான சிறுவர்கள் மேலாடையின்றி சேற்றிலும் நிலத்திலும் புரள்வதால் அவர்கள் சொறி, சிரங்கு போன்ற தோல் நோய்களுக்கு விரைவில் ஆட்படுகின்றனர். குறிஞ்சி நாடனின் 'பாடேனா?' எனும் கவிதையில் இவர்களது நிலை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது;

"....மேனியது படம் விரிக்க
தோல் சொறியால் ரணமாகி
தொடை எல்லாம் சிரங்காகி
பால்காணாப் பாலகர்கள்
படும் கொடுமைப் பாடேனா?......"

(குறிஞ்சி நாடன், (1999), குறிஞ்சி நாடன் கவிதைகள், ப.61)

தம் பிள்ளைகள் நிர்வாணமாய் இருக்கும்போது, மலையக மக்களில் ஒரு கூட்டத்தினர் அரசியல் தலைவர்களுக்குப் பொன்னாடை போர்த்துகின்றனர். என்பதை 'நிர்வாணமும் பொன்னாடையும்' எனும், இராகலை பன்னீரின் கவிதையில் கூறப்பட்டுள்ளது.

இம்மலையகச் சிறுவர்கள் ஏனைய சிறுவர்களைப் போல் வாழ ஆசைப்படுகின்றனர். வகைவகையான உணவுகளை உண்ணவும், அழகழகாய் ஆடைகள் அணியவும் பாதணிகள் அணியவும், மற்றவர்களைப் போல் சந்தோஷமாக வாழவும் நாளும் நாளும் ஏங்கித் தவிக்கின்றனர். இவர்களது எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாகவே மாறுகின்றன. இந்நிலைமைகளைக் குறிஞ்சி இளந்தென்றலின் 'தீபாவ(லி)ளி', 'ஓரத்தில் நின்றே', குறிஞ்சித் தென்னவனின் 'சம்பள நாள்', முதலிய கவிதைகள் சித்திரித்துக் காட்டுகின்றன.

தீபாவளித் தினங்கள், போன்ற விசேட தினங்களில் ஏனைய பிள்ளைகளைப் போல் வண்ண வண்ணமாய் ஆடை அணிகலன்களை அணிந்தும், பட்டாசுகள் கொழுத்தியும் மகிழ்வதற்கான வாய்ப்புக்கள் இவர்களுக்குக் கிடைப்பது மிகக் குறைவு. அவ்வாறான மகிழ்ச்சிக்குரிய தினங்கள் இவர்களுக்கு மனச்சுமைகள் அதிகரிக்கும் தினங்களாகவும், மற்றவர்களைப் பார்த்து ஏங்கித் தவிக்கும் நாட்களாகவுமே விளங்குகின்றன. தந்தையை இழந்த ஒரு சிறுமி புத்தாடையின்றி ஏங்கும் நிலையும், பட்டாசு வாங்கித் தரும்படி அழும் சிறுவன் தந்தையால் அடித்துத் துன்புறுத்தப்படும் நிலையும் 'தீபாவ(லி)ளி' எனும் கவிதையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன;

".......... பட்டாசு வாங்க
காசு தராமல் பையனின்
முதுகில் பட்டாசு சத்தம்
தந்தை போட்ட அடியில்
..........
அப்பா இருந்திருந்தால்
புதுப் பாவாடையும் தாவணியும்
வாங்கித் தந்திருப்பார் – என
இறந்து போன தன் தந்தையை
நினைத்து
வீதியில் உலாப்போகும்
பல பாவாடை தாவணிகளையும்
பார்த்து ஏங்கும்
சிறுமியின் மனசு ........"

(குறிஞ்சி இளந்தென்றல், (2003), அப்புறமென்ன, ப. 51)

மேலும், பிள்ளைகள் தாயின் சம்பள நாளை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர். தாய் தனக்குப் பணம் தருவார், தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கி உண்ணலாம் என எதிர்பார்ப்பர். பல்வேறு ஆசைகளை வளர்த்துக் கொள்வர். சம்பள நாட்களில் வியாபாரிகளின் வரவும் அதிகம். வியாபாரிகளின் பின்னாலே சிறுவர் கூட்டமே செல்லும். அவர்கள் விற்கும் உணவை வாங்கி உண்ண சந்தர்ப்பம் கிடைக்காத போதும் அவற்றைப் பார்த்து அவர்களது வாய்களில் இருந்து எச்சில் கொட்டும். சில சிறுவர்கள் இவ்வியாபாரிகளைக் கண்டதுமே அவற்றை வாங்கித் தரும்படி தாயிடம் அழுது நிற்பர். எனினும், பெரும்பாலான சிறுவர்களின் இவ்வாசைகள் நிராசைகளாகவே ஆகிவிடுகின்றன. 'சம்பள நாள்' எனும், குறிஞ்சித் தென்னவனின் கவிதையில் சிறுவர்களின் இந்த ஏக்கம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

> "..பத்தாம் திகதியில் சம்பளமாம், சின்னப்
> பையனுக் கோ, பெருங் கொண்டாட்டம்!
> "மொத்தமாகச் சம்பளம் வாங்கிடுவா அம்மா
> முழுசா ஒருருவா தந்திடுவா!" என
> சித்தம் நிரம்பிய ஆசையிலே, தன்
> தோழர் பலருக்கும் சொல்லி வைத்தான்!
> முத்தம்மா சம்பளம் வாங்கி வந்தாள் - அவன்
> முதுகுல நாலு கொடுத்து வச்சாள்!..."
>
> (குறிஞ்சித் தென்னவன், (1987), குறிஞ்சித் தென்னவன் கவிதைகள், ப. 13)

இவ்வாறு இச்சிறுவர்களின் ஆசைகளும், எதிர்பார்ப்புக்களும் ஏமாற்றமடைகின்றன. தாம் நினைப்பவற்றை எல்லாம் அடைந்து கொள்ள முடியாமல் இச்சிறுவர்கள் கஷ்டப்படுகின்றனர். இவர்களுக்கு விளையாடுவதற்கான பொருள்களும் கூட, தமது சூழலில் உள்ள மண்ணும் கம்பு தடிகளுமே. மனஎழுச்சி வளர்ச்சிக்குரிய விளையாட்டுப் பொருட்களோ, உபகரணங்களோ இவர்களுக்குக் கிடைப்பதில்லை. ஏனைய சிறுவர்கள் சிறுவர் விளையாட்டுத் திடல்களில் சென்று பல்வேறு வகையான விளையாட்டுக்களை விளையாடி மகிழும்போது, இச்சிறுவர்கள் மலைமுகடுகளிலும், தேயிலைச் செடிகளுக்குள்ளும், காடுகளுக்குள் மரங்களில் ஏறியும், விளையாடும் நிலையே அதிகம்.

ஏனைய சிறுவர்கள் பூமெத்தைகளில் படுத்துறங்கும்போது இச்சிறுவர்களுக்குப் படுப்பதற்குப் பாய் கூட, இன்றிக் கஷ்டப்படும் நிலை காணப்படுகின்றது. இவ்வாறு வறுமை காரணமாகச் இச்சிறுவர்கள் தமது ஆசைகள் எதனையும் அனுபவிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர்.

1.2 சிறுவர்களுக்குப் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் சரிவரக் கிடைக்காமை:

பிள்ளைகளின் உடல் உள வளர்ச்சிக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் மிகவும் இன்றியமையாதனவாகும். பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் சரியான முறையில் கிடைக்கும் போது, அவர்கள் சிறந்த மன எழுச்சிகளைக் காட்டுகின்றனர். அதேவேளை, அவர்களிடம் தன்னம்பிக்கையும், தைரியமும் வளர்கின்றன. பெற்றோரிடம் இருந்து அன்பு கிடைக்காத பிள்ளைகள் அதற்காக ஏங்கித் தவிப்பதோடு, எதிலும் பற்றற்றவர்களாகவும், வேறு வழிகளில் அவ்வன்பைத் தேட முயற்சிப்பவர்களாகவும் காணப்படுவர். பிள்ளைகளின் நெறி பிறழ்விற்கு இது முக்கிய காரணமாக அமைகின்றது. அவர்களின் அடிப்படையான தேவைகள், எதிர்பார்ப்புகள் பூர்த்தியாக்கப்படும் போதுதான், அடுத்த எதிர்பார்ப்புகள் வளரும். அந்தவகையில் அன்பும் அரவணைப்பும் பிள்ளைகளின் அடிப்படையான எதிர்பார்ப்புக்கள். அவர்களின் அவ்வெதிர்பார்ப்புகள் பூர்த்தியாக்கப்படுமாயின், அவர்களிடமிருந்து ஏனைய விடயங்களிலும் சரியான பிரதிபலனை எதிர்பார்க்கலாம்.

தாயின் முழுமையான அன்பைப் பிள்ளைகள் பெறுவதும் அசாத்தியமாகின்றது. தாயும் வேலை முடித்து வரும்போதே பிள்ளைகள், எத்தனையோ ஆவல்களை மனதில் சுமந்தவர்களாக இருப்பர். பகற்பொழுது முழுவதும் வெறுமையான மனதோடு அலைந்து திரிகின்றனர். மாலையில் தாயானவள் வீட்டுக்கு வந்ததும் இச்சிறுவர்கள் உறங்கும் வரைக்குமான சிறு நேரத்திற்குள்ளேயே பெற்றோர் பிள்ளைகள் உறவு காணப்படுகின்றது. அவர்களுக்குச் சுகவீனம் ஏற்பட்டாலும், தாய் அருகிலிருந்து பராமரிக்கும் நிலை மலையகத்தில் மிகக் குறைவு. காரணம் தாய் வேலைக்குச் செல்லாது விட்டால் சம்பளம் கிடைப்பதில்லை.

பிள்ளைகள் தாயின் அன்புக்காக ஏங்கி நிற்கும் போது, தந்தை குடித்து விட்டு வீட்டில் சண்டை போடுவதும் தாயை அடிப்பதுமான சூழ்நிலைகளும் காணப்படுவதால் அந்தத்

தாயின் அன்புக்கும் இடமின்றி, அக்குழந்தைகளின் ஏக்கங்கள் தொடர்ந்தும் ஏமாற்றங்களாகவே கழிகின்றன. நிம்மதியான, அமைதியான சந்தோசமான சூழல் இச்சிறுவர்களுக்கு இல்லாமல் போகும்போது, அவர்கள் கல்வியிலும் அக்கறையற்றவர்களாகவும் மன நிம்மதி அற்றவர்களாகவும் சிறந்த மன எழுச்சிகளை வெளிப்படுத்த முடியாதவர்களாகவும் வாழ்வில் எவ்வித இலட்சியங்களும் அற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மேலும், சில சந்தர்ப்பங்களில் தாய்மாரும் தோட்ட அதிகாரிகளின் துன்புறுத்தல்களாலும் அளவுக்கதிகமான வேலைப்பழுவினாலும் கணவன்மாரால் வரும் கொடுமைகளாலும் ஏற்படக்கூடிய தம் மன உழைச்சல்களைப் பிள்ளைகளிடம் காட்டுவர். அதனால், ஒரு பாவமும் அறியாத அச்சிறுவர்கள் அநாதரவாக்கப்படுகின்றனர். பெனியின் 'ஒரு லயத்து ராகம்' எனும் கவிதையில் தாய்மார் படும் துன்பங்களால் ஏற்படும் மன உழைச்சலுக்குப் பிள்ளைகள் பலியாகின்றனர் என்பது பின்வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளது;

"......... பாவம்
எங்கள் குழந்தைகள்
எங்களின் உள்மன
உளைச்சல்களுக்குப்
பலியாகிப் போவது
அவர்கள் தானே
வீட்டில் வந்தால்
கணவனின் ஏச்சு
வேலைக்குப் போனால்
கணக்கனின் ஏச்சு!
இப்படி
புழுங்கி புழுங்கி
எங்களின் கோபம்
எங்கள்
பிள்ளைகளிடம் தான்
பிரட்டுத் தப்பாய்
பிறவி எடுக்கிறது..."

(பெனி, (1996),போர்க்களப் பூபாளங்கள், ப. 127)

பெற்றோர் காலையிலே பிள்ளைகளை விட்டுவிட்டு, வேலைக்குச் சென்று விட்டால் அவர்கள் எந்த பாதுகாப்போ, அரவணைப்போ இன்றி, காடு மேடுகளில் அலைந்து திரிகின்றனர். அவ்வாறான நிலைமைகளால் அவர்களது எதிர்காலமே கேள்விக் குறியாக்கப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் சந்தனம் சத்தியநாதனின் 'கிளை தவறிய இலைகள்' எனும் கவிதையில் சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், மலையக மக்களிடம் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் குறைவாகக் காணப்படுவதால் பெரும்பாலான குடும்பங்களில் அதிகமான பிள்ளைகள் காணப்படுகின்றனர். அதனால், அதிக வேலைப்பழு பெண்களைச் சார்ந்து நிற்கின்றது. இவ்வாறான நிலைமைகளால் தாயால் சிலவேளை, எல்லாப் பிள்ளைகளையும் சரிவரக் கவனிக்க முடியாமல் போய்விடுகின்றது. பொதுவாக அதிக பிள்ளைகள் ஒரு குடும்பத்தில் காணப்படும் போது, மூத்த பிள்ளைகளும் சிறுவர்களாக இருந்தாலும், இளைய பிள்ளைகளையே அதிகம் கவனிப்பதாகத் தாய்மாரின் செயற்பாடுகள் அமைவது இயல்பு. ஆனால், ஏனைய பிள்ளைகளும் தாயின் முழுமையான அன்பும் தன்னையே வந்தடைய வேண்டும் என்றே எதிர்பார்ப்பர். இது நிறைவேறாது போகும்போது, பிள்ளைகள் அச்சிறுவர்கள் தம் மன நிலைகளைப் பல்வேறு வகையிலும் காட்ட முற்படுவர். குறிப்பாக படுக்கையை நனைத்தல், குறும்புத் தனங்கள் செய்தல் முதலியவற்றைக் கூறலாம். பிள்ளைகள் பெற்றோரின் அன்பும், கவனிப்புமின்றி கஷ்டப்படும் நிலை காணப்படுவதை 'மலையகத்து சுப்பன்' எனும் கவிதை சித்திரிக்கின்றது;

"அப்பன் ஒரு குடிகாரன்
ஆத்தாளோ பிள்ளை மெசின்
சுப்பன் என்ப தென்பேரு
சுதந்திரம் தான் எனக்கேது?"

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 14)

எனக்கூறுவதன் மூலம் இதனை அறியலாம். இவ்வாறு சிறுவர்கள் தாம் சிறுவயதிலேயே வாழ்வில் ஏமாற்றம் அடைந்தவர்களாகவும் தம் எதிர்பார்ப்புக்களை அடைய முடியாதவர்களாகவும், மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

அது மாத்திரமன்றி, இச்சிறுவர்கள் ஆரம்பத்தில் இருந்தே சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் தான் வளர்க்கப்படுகின்றனர். சந்தோசமாகவும், சுதந்திரமாகவும் தம் பெற்றோரின் அன்பில் வளர வேண்டிய வயதில் இவர்கள், ஆயாமாரின் கட்டுப்பாட்டில், சிறுவர் இல்லங்களில் வளர்க்கப்படுவதால், இயல்பாகவே கோழைத்தனமானவர்களாக உருவாக்கப்படுகின்றனர். காரணம், இப்பராமரிப்பு இல்லங்களில் குழந்தைகளைப் பராமரிப்போர், சேவை மனப்பான்மையோடும் உளவியல் அணுகுமுறைகளோடும் இவர்களைப் பராமரிப்பது

குறைவு. அதேவேளை, பெரியளவில் அன்பையும் பாசத்தையும் காட்டி வளர்ப்பதும் குறைவு. அதிகமான பிள்ளைகள் ஆயாமாரைக் கண்டால் பயந்து அடங்கியிருப்பர். அதேவேளை, ஆயாமாரும் பல பிள்ளைகளை ஒரே நேரத்தில் கவனிக்க வேண்டி இருப்பதால் கடின போக்கோடும், பயம் காட்டியும் இப்பிள்ளைகளைப் பராமரிப்பர். அதனால், இச்சிறுவர்கள் ஆரம்பத்திலிருந்தே பயந்த சுபாவம் கொண்டவர்களாகவே வளர்கின்றனர்.

சில ஆயாமார், பிள்ளைகளை விட்டு விட்டு, தமது வேலைகளிலேயே அதிக அக்கறை செலுத்துகின்றனர். அதனால் அப்பிள்ளைகள் அங்குமிங்கும் விழுந்தும், கண்டபடி நிலத்தில் புரண்டு கொண்டும் இருப்பர். உழைப்புக்காகச் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் வேலைசெய்வோர், பொறுப்புணர்ச்சி அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். ஆயாமாரின் பொறுப்பற்ற தன்மையைக் குறிஞ்சித் தென்னவனின் குறும்பா ஒன்று பின்வருமாறு தெளிவு படுத்துகின்றது;

“ஆயம்மா வாகவரும் – பெண்கள்!
அவர்களுக்கோ நாவலிலே கண்கள்!
தாயம்மா மீனாட்சி –
சரசுவதி பிள்ளைகளின் –
வாயினிலே நிறைந்திருக்கும் மண் கல்!”

(குறிஞ்சித் தென்னவன், (1987), குறிஞ்சித் தென்னவன் கவிதைகள், ப. 25)

வி.கே. பெரிய சாமியின் ‘எனக்கு நீ என்ன செய்தாய்’ எனும் கவிதை ஆயாமாரிடம் வளரும் பிள்ளை தன் தாயன்பு மீதான ஏக்கத்தினையும், ஏமாற்றத்தினையும் தன் தாயிடம் கூறி, தனக்காக நீ என்ன செய்தாய் என கேட்பதாக அமைந்துள்ளது.

ராமையாவின் “பிள்ளை பார்க்கும் ஹாயம்மா” எனும் தலைப்பில் அமைந்த கவிதை, பிள்ளை மடுவத்திற்குப் பொறுத்தமற்ற ஆயாமாரின் நிலைமைகளைச் சிறப்பாகச் சித்திரித்துக் காட்டுகின்றது. அவ்வாயாமார்கள் உழைப்பு ஒன்றையே நோக்கமாகக் கொண்டவர்கள். அதேவேளை, பிள்ளைகளின் மனநிலைகள் பற்றி சற்றும் சிந்திக்க மாட்டார்கள். தோட்டத்துறைமாரைக் கவரும் வகையில் ஆடைகளை அணிந்து கொண்டு அவர்களோடு கொஞ்சிக் குழாவுவதும், பாட்டுக்கேட்பதும்,நாவல் வாசிப்பதுமென காலத்தைக் கழிப்பர். குழந்தைகள் மலசலம் கழித்தால் சுத்தம் செய்யவோ அவர்கள் அழும்போது தூக்கி அணைக்கவோ விரும்பமாட்டார்கள். மாறாக தோட்ட வேலையில் இருந்து ஓய்வுபெற்ற ஒருவரைத் தமக்குத்துணைக்கு அழைத்து, அவர்களிடமே வேலைகளைச் செய்யும்படி கட்டளையிடுவர். அதேவேளை, குழந்தைகளின் மொழிகளைப் புரிந்து கொள்ளவும் மாட்டார்கள்.

மேலும், அதிகமான பிள்ளை மடுவங்கள், பிள்ளைகளை வளர்ப்பதற்கு ஏற்ற முறையில் அமைக்கப்படவில்லை என்பதனை, ராமையா பின்வருமாறு கூறுகின்றார்;

“பிள்ளை மடுவக் காம்பிராவில்
பேய்கள்கூடவந்து போனதில்லை
உள்ளவரைக்கும் உழைப்போர்க்கென்று
ஒதுக்கப்பட்ட மாட்டுக்கொட்டில் இது
பிள்ளைகளைக் கட்டிவைப்பதற்கு
பிறநாட்டார் செய்த ஒழுங்கு இது
‘இல்லை’ ‘அது – இது’ என்று கேட்டால்
இல்லை என்ற சொல்லே பதிலாகும்
பிள்ளைகள் போடும் இக்கொட்டில்
பெற்றோரும் காணா நரகமாகும்
ஐம்பது பிள்ளைகள் உள்ளிருக்கும்
ஆயிரம் தொல்லைகள் வந்துநிற்கும் கம்பளி போட்டு போத்தி வைத்த
காய்ச்சல்குழந்தைகள் அங்கிருப்பார்....”

(ராமையா, சி.வே., (2004), மலைமேகம், ப. 9)

மேலும், ஜயந்தனின் ‘கம்பளிக் காரிகையீர்’, தர்முவின் ‘பேரின்பம்’, ஈழவாணனின் ‘ஏன் பிறந்தாய்’ முதலிய கவிதைகளும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களில் இச்சிறுவர்கள் விடப்படுவது பற்றியே கூறுகின்றன.

குடும்பத்தில் ஆண் – பெண் அல்லது கணவன் மனைவிக்கிடையேயான உறவு நிலைகளில் சமத்துவமின்மையாலும் ஆணாதிக்கவாத சமூகமாகக் காணப்படுவதாலும் பெரும்பாலான கணவன்மார் போதைவஸ்துக்கு அடிமையாக இருப்பதாலும் பெற்றோர் வெளிநாடு செல்வதாலும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதாலும் பிள்ளை சிறுவயதில் இருக்கும்போதே தாய் இறப்பதாலும் தந்தைமார் வேறு திருமணம் செய்து கொள்வதாலும் மற்றும் இதுபோன்ற காரணங்களாலும் அதிகமான மலையகச் சிறுவர்கள் தமது பெற்றோரின் அன்பையும் அரவணைப்பையும் பெறத் தவறுகின்றனர்.

**1.3 சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்படல்:**

சிறுவர் துஷ்பிரயோகத்தில் முக்கிய ஓர் அங்கமாக பாலியல் ரீதியான துஷ்பிரயோகம் விளங்குகின்றது. இப்பிரச்சினை உலகளாவிய ரீதியில் முக்கிய ஒரு பிரச்சினையாக விளங்குகின்றது. விபசாரம், ஆபாசப் படங்களுக்காக சிறுவர் சுரண்டப்படுதல் என்பன உலகளாவிய ரீதியில் வளர்ந்துள்ள ஒரு தொழிலாக விளங்குகின்றது. இதற்கு முக்கிய காரணம் வறுமை, பேராசை, பாலியலுக்கான தேவையின் அதிகரிப்பு என்பனவே. சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவரின் உதவியுடன் இலங்கையில் செய்யப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான ஆய்வு அறிக்கையில் இந்நிலைமைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளதாக டிரேல்கூரே குறிப்பிடுகிறார்.

> "விபசாரம், ஆபாசப் படங்கள் ஊடாகச் சிறுவர் சுரண்டப்படுவது என்பது உலகம் முழுவதிலும் வளர்ந்துள்ள கைத்தொழிலாக விளங்குவதற்கு வறுமை, பேராசை, மலிந்த பாலியலுக்கு இருக்கும் தேவை என்பன காரணங்களாகும். வறுமையான வளமான நாடுகள் இரண்டிலும் கோடிக் கணக்கான சிறுவர்களதும் சிறுமிகளதும் வாழ்க்கையை அது கெடுத்து வருகின்றது.
>
> முறிந்த திருமணப் பந்தங்கள் அல்லது குடிக்கும் போதைக்கும் அடிமையான பெற்றோரைக் கொண்ட மிக மோசமான வறிய குடும்பச் சிறுவர்கள் அதிக ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். சில சந்தர்ப்பங்களில் தாய்மாரே விபசாரிகளாக உள்ளனர். பிச்சை எடுத்தோ, களவெடுத்தோ, போதைப் பொருள் விற்றோ அன்றாடம் உயிர்வாழும் வீதியோரச் சிறுவருக்கு விபசாரம் கூடிய இலாபத்தைப் பெறும் தொழிலாக இருக்கலாம். கொழும்பு யுனிசெப் தயாரிப்பான இலங்கையின் பிள்ளைகள், பெண்களின் தற்போதைய நிலைப்பாட்டுப் பகுப்பாய்வு (1991) இலங்கையில் சிறுவர் விபசாரம் மோசமான அளவுக்கு அதிகரித்துள்ளது எனக் குறிப்படுகின்றது. விபசாரத்தில் ஈடுபட்டுள்ள ஆண் பிள்ளைகளின் தொகை 3,000 இல் இருந்து 30,000 வரை உள்ளது. விபசாரத்தில் ஈடுபட்டுள்ள பிள்ளைகளில் ஆண்களே அதிகம் எனவும் அவர்களது வயது 07 தொடக்கம் 19 வரை இருக்கும் என அவ்வறிக்கை மேலும் கூறுகின்றது.............இலங்கையில் சிறுவர் விருத்தி தொடர்பாக எடுக்கப்பட்ட விபரக்குறிப்பு (1991)இல்...........வீட்டு வேலைக்காரராக தொழிலில் அமர்த்தப்பட்டுப் பின்னர் உல்லாசப் பயண ஹோட்டல்களிலும் விடுதிகளிலும் விபசாரத்தில் ஈடுபடுத்தப் படுகின்றனர் எனவும் அவ்விபரக் குறிப்பு கூறுகின்றது."

இவ்வகையில் நோக்கும்போது, குறிப்பாக மலையகச் சிறுவர்கள் வறுமை, தந்தையின் போதைவஸ்துப் பழக்கம், தாய் வெளிநாடு செல்லல், சிறுவர்களின் பாதுகாப்பற்ற நிலைமை, பலாத்காரம் முதலிய காரணங்களால் விபசாரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சந்தனம் சத்தியநாதனின் 'கிளை தவறிய இலைகள்' தமிழோவியனின் 'கருகிய மலர்', இரா நித்தியானந்தனின் 'கறுப்பு தேசத்தின் சிவப்பு நிறப் பூக்கள்', பெனியின் 'சௌமியா', 'பிஞ்சில் நஞ்சு', இக்பால் அலியின் 'பள்ளிச் சூரியன்', றசீனாவின் 'அம்மா வந்து விட்டேன்' முதலிய கவிதைகளில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவது எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சிறுவர் உரிமைச் சட்டத்தில் அதிலும் பாலியல் தொடர்பான சட்டத்தில் பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட அனைவரும் சிறுவர்களாகவே கருதப்படுகின்றனர்.

மலையகத்தின் சில இடங்களில் தாய்மார் விபசாரத்தினைத் தொழிலாகச் செய்து வருகின்றனர். அவ்வாறானவர்களின் பிள்ளைகளும் அத்தொழிலில் விரும்பியோ, பலாத்காரமாகவோ ஈடுபடுத்தப்படுகின்றனர். வறுமை இதற்கு அடிப்படையான காரணமாக அமைந்துள்ளது. இரா.நித்தியானந்தனின் 'இந்தக் கறுப்புத் தேசத்தின் சிவப்புப் பூக்கள்' எனும் கவிதை இவ்வாறான நிலைமைகளைப் பின்வருமாறு சித்திரித்துக் காட்டுகின்றது.

"....... மாதவி மகளாய்ப்
பிறந்திருந்தால்
பிச்சைப் பாத்திரம்
சுமந்திருப்போம்
மாதவியாகவே
பிறந்து விட்டோம்
இனி
கோவலர்க்குத்தானே
கொண்டாட்டம்......"

(நித்தியானந்தன், இரா., (1993), முகவரியைத் தொலைத்தவர்கள், 'இந்தக் கறுப்புத் தேசத்தின் சிவப்புப் பூக்கள்')

இக்கவிதை மூலம் தோட்ட அதிகாரிகளால் இச்சிறுமிகள் கற்பழிக்கப்படுகின்றனர் என்பது தெளிவாகின்றது. இவ்வாறான நிலைமைகளைப் புதுமைப் பித்தனின் 'துன்பக்கேணி' எனும் கதை விரிவாக எடுத்துரைக்கின்றது.

அண்மைக் காலங்களில் மலையகப் பாடசாலைகளில் கற்பழிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் சில, ஆசிரியர்களாலும், மற்றும் சில அதிபர்களாலும் நடந்தவையே. பாடசாலை செல்லும் சிறுமிகளுள் பலரை மாலை நேர வகுப்புகள் நடத்துவதாக அழைத்துக் கற்பழித்த சம்பவங்கள் மலையகப் பகுதிகளில் இடம்பெற்றதாகவும், அதேவேளை, அதிபர் ஒருவர் மாணவி ஒருவரைக் கற்பழித்துக் கர்ப்பிணியாக்கிய செய்திகளையும் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிந்தது. எனினும், அவர்களுக்கு எதிராகச் சரியான தண்டனைகள் வழங்கப்படாதிருப்பதால், இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. சமூகத்தை வழிநடாத்த வேண்டியவர்களே சமூகத்தைச் சீரழித்தால் இச்சிறுவர் சிறுமிகளின் எதிர்காலம் என்னவாகும் என்பது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகும். தமிழோவியனின் 'கருகிய மலர்' எனும் கவிதையிலும் மலையகச் சிறுவர்களுக்குக் கல்வி புகட்ட வந்த ஆசிரியர் ஒருவர், ஒரு சிறுமியைக் கற்பழிக்கும் நிகழ்ச்சி அவல ஓவியமாக வரையப்பட்டுள்ளது.

வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்படுகின்ற சிறுவர்கள், அவ்வீட்டில் உள்ளவர்களது பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். அதேவேளை நகர்ப்புறங்களில் இவ்வாறான சிறுவர்கள் வீட்டு வேலைகள் செய்வதோடு உல்லாசப் பயண ஹோட்டல்களில் உள்ள விபசார விடுதிகளுக்கும் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இவ்வாறான நிலைமைகள் இச்சிறுவர்களின் வறுமை காரணமாகவே நிகழ்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. சந்தனம் சத்தியநாதனின் 'கிளை தவறிய இலைகள்' எனும் கவிதையும் இவ்வாறான விடயங்களைச் சித்திரிக்கின்றது.

இக்பால் அலியின் 'பள்ளிச் சூரியன்' எனும் கவிதையும், திட்டமிட்டு, வெறித்தனமான முறையில், படைவீரர்கள் சிறுவர்களைக் கற்பழிக்கும் நிலையைப் பின்வருமாறு சித்திரித்துக் காட்டுகின்றது;

"........ துள்ளித் துள்ளி ஓடும்
பள்ளிச் சூரியன்
முன்னில் பட்டு
தலைகீழாய் நிற்கின்றது
இளம் பிஞ்சுகள்
காய்க்கு முன்னே
காய வைத்து அழிப்பதற்காய்
மகரந்தச் சேர்க்கை
திட்டமிட்டு நடக்கிறது.
சின்னஞ் சிறுசுகளின்
குடல் வெளித் துவாரம் கிழிந்து
இரத்தம் கசியக் கசிய ஓட - ஈன
இரக்கமற்ற காம வெறி நாய்களின்
அந்தரங்கம்
வேற்றுக் கற்பனையோடு
உலாவரும் ......."

(இக்பால் அலி, (2001), புள்ளிகளில் சில புள்ளிகள், ப. 50)

சிலர், வீடுகளில் அன்பும் அரவணைப்பும் கிடைக்காத சிறுவர்களை இனங்கண்டு அவர்களோடு அன்பு காட்டி காதலிப்பது போல் நடிக்கின்றனர். தமக்கு அன்புகாட்ட யாருமில்லையே என ஏங்கித் தவிக்கும் சிறுவர்களுக்கு இவர்களது போலியான அன்பும்

பெரிதாகவே விளங்குகின்றது. இச்சிறுவர்கள் தம்மீது அன்பு காட்டி அரவணைப்போரின் செயல்களுக்கு விரைவில் அடிமையாகி விடுகின்றனர்.. இதனை இவ்வாறு பழகும் ஆண்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலை காணப்படுகின்றது. ஆனால் அச்சிறுமிகளும் இவர்கள் தம்மை ஏமாற்றுவார்கள் என்பதை உணராதவர்களாய் அவர்களது பாலியல் ஆசைகளுக்குத் துணைபோகும் நிலையும் ஏற்படுகின்றது. ஆனால் இவ்வாறு தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டபின், மீண்டும் அச்சிறுவர்கள் களங்கப்படுத்தப்பட்டவர்களாக அநாதரவான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்நிலைமைகளை பெனியின் 'சௌமியா' எனும் கவிதை சித்திரிக்கின்றது.

'பிஞ்சில் நஞ்சு' எனும் பெனியின் கவிதையிலும் உண்ண உணவின்றி தம் வயிற்றைக் கழுவுவதற்காக தம் எதிர்காலத்தையே விற்கும் சிறுவர்களின் அவல நிலை புலப்படுத்தப்பட்டுள்ளது.

பல பகுதிகளில் இருந்தும் வேலைக்காக என்றும், வேறு தொழில் உதவிகளுக்காக என்றும் கொண்டு செல்லப்படும் சிறுவர்களில் பெரும்பான்மையானோர் நீர்கொழும்பு முதல் தங்காலை வரையான பகுதிகளில் அதிகளவில் உள்ள உல்லாசப் பிரயாண விடுதிகளில் பாலியல் வல்லுறவுகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என சிறுவர் தொடர்பாக நடாத்தப்பட்ட ஆய்வுகளும், புள்ளிவிபரங்களும் தெரிவிக்கின்றன. இவ்வாறான கலாசார சீரழிவுகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதே ஒழிய குறைவதாகத் தெரியவில்லை.

மேலும், தோட்ட அதிகாரிகளின் பங்களாக்களில் வேலை செய்யும் தோட்டச் சிறுமிகளும் அவ்வதிகாரிகளால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர். சில சிறுமிகள் பகல் பொழுதுகளில் வீடுகளில் தனியாக இருக்கும் வேளையிலும் மறைவிடம் கூடத்தேடாது இவ்வதிகாரிகளால் கற்பழிக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

அது மட்டுமன்றி, பெண்கள் சிறுவர்களை வீடுகளில் விட்டு விட்டு வெளிநாடுகளுக்குச் செல்வதால் இச்சிறுவர்களுக்கான பாதுகாப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. அத்தோடு குடிகார அப்பாமாரால் பிள்ளைகளின் நிலைமைளைப் புரிந்து கொள்ளவோ, அவர்களுக்கான பாதுகாப்பை வழங்கவோ முடியாத நிலை காணப்படுகின்றது. இதனை சில காமுகர்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். தந்தை குடிவெறியில் படுத்துக் கிடக்க வீட்டுக்கு வருவோரின் காமப் பார்வைக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் இச்சிறுவர்கள் ஆட்படுகின்றனர். அதேவேளை வீட்டில் உள்ளவர்கள், பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் ஆகியோராலும் இந்நிலைமை இச்சிறுவர்களுக்கு ஏற்படுகின்றது. றசீனா புகாரின் 'அம்மா வந்து விடேன்' எனும் கவிதையில் இவ்வாறான நிலைமைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன;

தமது வீட்டுக்குள்ளேயே உள்ளவர்களால் மலையகச் சிறுமிகள் கற்பழிக்கப்படும் நிலையை 'ஓய்ந்து போன பம்பரம்' எனும் சிறுகதை தெளிவாக விளக்கி நிற்கின்றது. காம வெறிபிடித்தவர்களிடம் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள முடியாமல் துன்பப்படும் சிறுமியின் அவலம், இதில் புலப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, மனைவி வெளிநாடு சென்றதும், கணவன் தமக்குள் அலைமோதும் தம் காம உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தம் மகளிடம் தகாத முறையில் நடந்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் உள்ளன. ஆனால், இவ்வாறான விடயங்கள் சிறுகதை, நாவல்களில் ஆழமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. பாலியல் தொடர்பான அம்சங்கள் நாவல், சிறுகதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ள அளவுக்கு விரிவாகவும் துல்லியமாகவும் கவிதைகளில் காட்டப்படவில்லை என்றுதான் கூற வேண்டும்.

### 1.4 சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படல்:

சிறுவர் துஷ்பிரயோகத்தில் முக்கிய ஒரு அங்கமாக சிறுவர் வேலைக்கமர்த்தப்படலும் விளங்குகின்றது. சிறுவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு, சிறுவர் உரிமைகள் தொடர்பாக ஐ. நா. சபையால் பல்வேறு சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டு அமுல்படுத்தப்படுகின்றன. இலங்கையில் சிறுவர்கள் தொழில் பார்த்தல் தொடர்பாக பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மலையகச் சிறுவர்கள் பலர் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். இதனைப் இலங்கைச் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான ஆய்வு உறுதிசெய்கின்றது.

> "இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான விபரத்தின்படி (தேசிய திட்டமிடல் திணைக்களம், 1991) 100,000 சிறுவர்கள் தொழில் புரிவோராகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவர்களுள் 75 வீதமானோர் பெருந்தோட்டத் துறையையும் நகரப் பகுதிகளையும் சார்ந்தவர்களாவர்"

சிறுவர்கள், இன்று பல்வேறு வகையான தொழில்களையும் செய்வோராகக் காணப்படுகின்றனர். வீதியோர கடைகளிலும் வீட்டு வேலைகளிலும், சைக்கிள் பழுதுபார்க்கும் கடைகளிலும், கடைகள், ஹோட்டல்களிலும் வேலைக்கு அமர்த்தப் பட்டிருப்பதோடு, தீப்பெட்டித் தொழிற்சாலைகள், ஊதுபத்தி செய்தல், பீடி சுற்றுதல், பிச்சை எடுத்தல், விபச்சாரம் முதலிய தொழில்களிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள், மிகக் குறைவான சம்பளத்தையே பெறுகின்றனர்.

சிறுவர்கள், வீடுகளில் பெற்றோருக்கு உதவியாக வேலைகளைச் செய்து கொடுப்பதால் அவர்கள் பெரியோர் செய்யும் வேலைகளைச் செய்வதற்குப் படிப்படியாகக் கற்றுக் கொள்கின்றனர். இது அவர்களது சமூகமயமாக்கல் செயற்பாட்டின் ஒரு பகுதியாகவே காணப்படுகின்றது. ஆனால் இவர்கள் செய்கின்ற வேலைகள் கல்வி பெறுவதற்கோ, அவர்களது சுதந்திரமான இயக்கத்திற்கோ அவர்களது வளர்ச்சிக்கோ தடையாக அமையக் கூடாது. அதேவேளை அவர்களது உடல் உள வளர்ச்சிக்குப் பங்கமாக அமையும் தொழில் செய்வதையோ, குறைந்த கூலிக்கு நீண்ட நேரம் வேலை செய்வதையோ, சுகாதாரத்திற்குப் பங்கம் விளைவிக்கும் தொழில்கள் செய்வதையோ சிறுவர் பாதுகாப்புச் சட்டமூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

மலையகச் சிறுவர்களைப் பொறுத்தவரையில், அதிகமாக வீட்டு வேலைகளுக்கு அமர்த்தப்படுதல், கடைகள், ஹோட்டல்களில் எடுபிடி வேலைகளுக்கு அமர்த்துதல், தமது வீடுகளிலே பல்வேறு வகையான வேலைகளில் ஈடுபடுத்தல், பெற்றோருக்குத் தோட்டங்களுக்கு தேநீர் எடுத்துச் செல்லுதல், பிச்சை எடுத்தல், விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படல் முதலிய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பிச்சை எடுத்தல், விபசாரத்தில் ஈடுபடுத்தப்படல் முதலியன முன்னைய பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளதால் அது பற்றி இப்பகுதியில் விபரிக்கவில்லை. அதேபோல் வீட்டு வேலைகளில் ஈடுபடுத்தப்படல் சிறுவர்கள் கல்வியில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளோடு தொடர்புபடுத்தி ஆராயப்படவிருப்பதால் அதுபற்றியும் இப்பகுதியில் ஆராயப்படவில்லை.

வீராபாலச்சந்திரனின் 'எங்களை ஏனின்று ஏங்க வைக்கிறீர்', வ.ஐ.ச. ஜெயபாலனின் 'எழில்முடி புனைக', குறிஞ்சி நாடனின் 'விரட்டடா பஞ்சந் தன்னை', தமிழோவியனின் 'இழிவினை நிறுத்து', பெனியின் 'ஒரு சமூகப் பணியாளன் உருவாகிறான்', இக்பால் அலியின் 'நானொரு புல்லாங்குழல்', 'புள்ளிகளில் சில புள்ளிகள்', 'ஏகத்துவம்', சந்தனம் சத்தியநாதனின் 'தவிர்த்து விடுங்கள்', குறிஞ்சி இளந் தென்றலின் 'திரும்பிப் பார்க்கிறேன்', றசீனா புகாரின் 'நல்லதைச் செய்யுங்க டீச்சர்' முதலிய கவிதைகள் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படல் பற்றிக் கூறுகின்றன.

சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதால் பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் கிடைக்காது போய் விடுகின்றது. பெற்றோரைப் பிரிந்த சிறுவர்கள் பிரிவாற்றாமையினால் மிகவும் துன்பப்படுவர். அவ்வாறான துன்பத்திற்கு ஆறுதல் தரக்கூடிய அன்பும் ஆதரவும் வழங்கக்கூடிய இடமாக வேலைக்கமர்த்தப்படும் இடங்கள் அமைவதில்லை. அதற்கு மாற்றமாக இச்சிறுவர்கள், சுமக்க முடியாத வேலைப்பழு சுமத்தப்பட்டு, கஷ்டப்படுத்தப் படுகின்றனர். அதேவேளை, அடித்துத் துன்புறுத்தியும், மனம் நோகும்படி ஏசியும் பலவாறு துன்பங்களுக்கு உட்படுத்தப்படுவர். வறுமை காரணமாக தமக்கு வருமானத்தைப் பெறும் வகையிலேயே இவ்வாறு சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

'புள்ளிகளில் சில புள்ளிகள்' எனும் கவிதை, ஒரு வீட்டில் வேலைக்கமர்த்தப்பட்டு அநியாயப்படுத்தப்பட்டதனால் வீட்டுக்குள்ளே முடங்கி நோயாளியாக்கப்பட்டு, வேதனைப்படும் தமது அக்காவின் துயரைத் தாங்க முடியாத தம்பி, தன் தாயிடம் தன்னையும் ஒரு வேலைக்காரனாக ஆக்கிவிட வேண்டாம் எனக் கெஞ்சிக் கேட்பதாக அமைந்துள்ளது. அவ்வகையில்,

"அம்மா ..........!
என் மன அரங்கில்
எமது தேசம்
எரிமலையாய் குமுறி வெடிக்கும்
பாத்திரப் படைப்பில்
என்னை மட்டும் வேலைக்காரனாய்
ஆக்க வேண்டாம்
என்னையொரு
திறந்த தேசிய பல்கலைக்கழகமாய்
ஆக்கப் பாருங்கள்
இதை நான்
கெஞ்சிக் கேட்கிறேன்!"

(இக்பால் அலி, (2001), புள்ளிகளில் சில புள்ளிகள், ப. 15)

எனும் கவிதைப் பகுதி நோக்கத்தக்கது. பெற்றோர்கள் செய்கின்ற பிழையினால் தான், சிறுவர்கள் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுப் பட்டணங்களில் உள்ள கடைகளிலும், ஹோட்டல்களிலும் பாத்திரம் தேய்ப்பதற்காகச் செல்கின்றனர். பெற்றோர் சிறுவர்களை அடித்துத் துன்புறுத்துவதால் அவர்கள் கல்வியில் பின் தங்குகின்றனர். அதேவேளை தம் தந்தை, தாய்க்குச் செய்யும் கொடுமைகளைப் பொறுக்காத பிள்ளைகள் தன் தாய்மாரின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்காகவும் தாம் வேலைக்குச் சென்று விடுகின்றனர்.

இவ்வாறான நிலைமைகள் சந்தனம் சத்தியநாதனின் 'தவிர்த்து விடுங்கள்', றசீனா புகாரின் 'மலையகத்து சுப்பன்' முதலிய கவிதைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எழுபதுகளில் ஏற்பட்ட பஞ்சம் காரணமாகவும் சிறுவர்கள் கொழும்பு போன்ற நகர்ப்புறங்களுக்கு வேலை தேடிச் சென்றனர். அவ்வாறு சென்றவர்கள் பங்களாக்களிலும், சைவ ஹோட்டல்களிலும் பாத்திரங்களைக் கழுவி தமது வயிற்றைக் கழுவினர். இவ்வாறான நிலைமைகளை 'ஒரு சமூகப் பணியாளன் உருவாகிறான்' எனும் கவிதை எடுத்தியம்புகின்றது.

சில தந்தைமார் தம் பிள்ளைகளைக், குடிப்பதற்குக் காசு தேடுவதற்காகப் பலாத்காரமாக வீட்டு வேலைகளுக்காகக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவர். இவ்வாறான அவலநிலை றசீனா புகாரின் 'நல்லதைச் செய்யுங்க டீச்சர்' எனும் கவிதையில் கூறப்பட்டுள்ளது. படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தி, இவர்கள் வேலைகளுக்காகக் கொண்டு போய் விடப்படுவதால், இச்சிறுவர்களின் எதிர்காலமே பாழாக்கப்படுகின்றது.

> "......... பத்தாம் வகுப்புப் படிக்கையிலே
> பங்களா வேலைக்காக
> எங்கப்பா கூட்டி வந்தார்
> எஸ்டேட் தொர மம்மிகிட்ட
> படிக்காத அப்பன் அவன்
> குடிக்காக காசு தேட
> அடிபோட்டான் அன்றைக்கே
> அடிமையாக என்னை விற்க......"

(றசீனா, (2003), மண்ணிழந்த வேர்கள், ப. 29)

இவ்வாறான நிலைமைகளை நாவல், சிறுகதைகள் ஆழமாக எடுத்துக் காட்டியுள்ளன. தந்தையின் வற்புறுத்தலால் கல்வியை இடைநிறுத்தி விட்டு, கொழும்புக்கு வேலைக்குச் செல்லும் சிறுவனின் ஏக்கமும் ஏமாற்றங்களும் அவனுக்கு இழைக்கப்படும் கொடுமைகளும் க. சதாசிவத்தின் 'ஓர் அடிமையின் விலங்கு அறுகின்றது' எனும் சிறுகதையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தொழிலுக்கு அமர்த்தப்படும் பிள்ளைகள் அநியாயப்படுத்தப்படும் நிலையை, 'விரட்டடா பஞ்சந் தன்னை' எனும் கவிதையில் குறிஞ்சி நாடன் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்,

> ".....மழலை சொற் கேட்டுப் பெற்றோர்
> மக்களால் மகிழ்ந்திடாமல்
> குழந்தையை குசினி கூட்ட
> கொழும்புக்கு விட்டதாலே
> குழந்தைகள் மழலை கேளாக்
> குமரிகள் நெருப்பால் சுட்டுக்
> குழறிடும் சத்தம் நெஞ்சைக்
> குடையுது நித்தம் இங்கே ......"

(குறிஞ்சி நாடன், (1999), குறிஞ்சி நாடன் கவிதைகள், ப. 44)

அது மட்டுமன்றி, சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டாலும் கொஞ்சமும் ஓய்வின்றி கஷ்டப்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. காலை எழுந்தது முதல் இரவு உறங்கும் வரை கொஞ்சமும் ஓய்வின்றி அநியாயப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் படும் இவ்வாறான துன்பத்தை இக்பால் அலியின் 'புள்ளிகளில் சில புள்ளிகள்' எனும் கவிதை எடுத்துரைக்கின்றது.

இவ்வாறு சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதால் அவர்களது அடிப்படை உரிமைகள் கூட, மீறப்படுவது மட்டுமன்றி பல்வேறு வகையிலும் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். அதேவேளை, அச்சிறுவர்களின் எதிர்காலமே பாழாக்கப்படுகின்றது. இவ்வாறான நிலைமைகள் கே. விஜயனின் 'கசக்கப்படும் அரும்புகள்' எனும் சிறுகதையில் கூறப்பட்டுள்ளது. மேலும், பி. தமிழ்ச் செல்வன் மாசிலாமணியின் 'ஓ ......! இந்த மனிதர்கள்' எனும் கதையும் இந்நிலைமைகளை விரிவாக எடுத்துரைக்கின்றது.

மேலும், சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படும்போது அவர்களின் கல்வி முற்றாகப் பாதிக்கப் படுகின்றது. ஏனைய மாணவர்கள் அழகாக ஆடைகளை அணிந்து பாடசாலைக்குச் செல்லும்போது, இச்சிறுவர்கள் அவர்களைப் பார்த்து ஏங்குபவர்களாக விளங்குகின்றனர். வீரா.பாலச்சந்திரனின் 'எங்களை ஏனின்று ஏங்க வைக்கிறீர்', வ.ஐ.ச. ஜெயபாலனின் 'எழில்முடி புனைக' முதலிய கவிதைகள் இந்நிலைமைகளை முனைப்புடன் சித்திரிக்கின்றன.

> "உங்கள் குழந்தையெல்லாம்
> ஓய்யாரமாய் ஓடிப் பள்ளிக்குப் போகையிலே
> எம்பிள்ளை
> குசினிக் கக்கூசுக் கொல்லைப்புறங்களிலே
> வேலைக்காரனென வெதும்பியேமிக
> ஏங்குதையோ......."

(இளங்கதிர், (1981 – 1982), ப. 2)

எனக் கூறுவதன் மூலம், இச்சிறுவர்களின் ஏக்கமும் தவிப்பும் புலப்படுத்தப் பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

மலையகச் சிறுவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என்பதனை மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்தும் புரிந்து கொள்ள முடியும்.அவற்றைத் தீர்ப்பதற்கான பல்வேறு வழிமுறைகளையும் இக்கவிஞர்கள் சித்திரிக்கத் தவறவில்லை. கல்வியை மேம்பாடடையச் செய்தல், போதைவஸ்துப் பாவனையை ஒழித்தல், கற்றவர்கள் சமூக முன்னேற்றத்திற்காக உழைத்தல், மக்களின் பலம், பலவீனங்களை எடுத்துக்காட்டி, விழிப்புணர்வு ஊட்டலும் வாழ்வின் மீதான நம்பிக்கையை ஏற்படுத்தலும், சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவதைத் தடுத்தல், குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல், சிறுவர் உரிமைகள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் முதலியவற்றினூடாக மலையகச் சிறுவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமென மலையகக் கவிஞர்கள் தம் கவிதைகளில் சித்திரித்துள்ளனர்.

பயன்பட்ட நூல்கள்:


01. Congress Labour Foundation (1990), A Research Study on The Health Status of Women Plantation Workers in Sri Lanka, pp.17 – 19.
02. புதுமைப்பித்தன், (1977), புதுமைப்பித்தன் சிறுகதைகள், பக். 11 – 46.
03. Ameena Husain, (2000), Sometimes there is no blood: Domestic Violence and Rape in Rural Sri Lanka, pp. 25 – 57.
04. டேவிட், (1976), வரலாறு அவளைத் தோற்றுவிட்டது. பக். 114 – 135.
05. துரைவி விஸ்வநாதன், (தொகுப்பாசிரியர்), (1997), உழைக்கப் பிறந்தவர்கள், ப. 173.
06. சாவித்திரி, டபிள்யு. ஈ., குணசேகர, சந்திராகுணவர்தன, குலரட்ன, என்.ஜீ, (பதிப்பாசிரியர்கள்), (1998), "சிறுவர் உரிமைகள்: பாதுகாப்புக்கான உரிமை", சிறுவர் உரிமைகள் இலங்கை அனுபவம், பக்.139
07. தினகரன், (2005.02.04), 'ஆசிரியரால் மாணவி கற்பழிப்பு', ப. 1.
08. துரைவி விஸ்வநாதன் (தொகுப்பாசிரியர்) (1997), மு.கு.நூ, பக். 168 – 169
09. சாவித்திரி, டபிள்யு. ஈ., குணசேகர, சந்திராகுணவர்தன, குலரட்ன, என்.ஜீ, *(பதிப்பாசிரியர்கள்),* (1998), "சிறுவர் உரிமைகள்: பாதுகாப்புக்கான உரிமை", சிறுவர் உரிமைகள் இலங்கை அனுபவம், ப. 138.
10. மேலது, ப. 138.
11. துரைவி விஸ்வநாதன், (தொகுப்பாசிரியர்), (1997), மு.கு.நூ, பக். 103 – 104.
12. மேலது, ப. 64 – 67.